பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 06 | வியாழக்கிழமை | 20.03.2025 | அதிர்வு 227

## புதிய கூட்டால் தமிழரசுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை

### சுமந்திரன் வெளிப்படைக் கருத்து



(எஸ்.நிதர்ஷன்)

புதிய கூட்டுக்களால் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எந்த வித பாதிப்பும் 06

## எம்மைப் பலப்படுத்துவது காலத்தின் கட்டாயம்!

### முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஆசனம், பதவிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கொள்கையில் உறுதியாகப் பயணிக்கக் கூடிய எம்மைப் பலப்படுத்துவதுதான் காலத்தின் கட்டாயம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை யாழ்ப்பாணத்தில் நேற்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06



# பட்டலந்த விசாரணையை வைத்து தமிழின அழிப்பை மறைக்காதீர்கள்

### நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. இடித்துரைப்பு

**“பட்டலந்த என்ற சொல்லில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இனப்படுகொலையை மறைத்து விட வேண்டாம். தமிழர் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலையல்ல என வாதிடும் நீங்கள் பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்குத் தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாக கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதனை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.** 04




# மருதங்கேணி பரீட்சை நிலையத்தினுள் மாணவர்களிடையே நேற்று கைகலப்பு!


### வெளியாட்கள் அத்துமீறி நுழைந்து தாக்குதல்

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் அமைக்கப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைநிலையத்தில் நேற்றுக் காலை மாணவர்களிடையே கைகலப்பு இடம்பெற்றுள்ளது. இதையடுத்து வெளியாட்கள் பரீட்சை நிலையவளாகத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 05






நேற்று விடிகாலை வெளியான காலை முரசில் – “தம்மைக் கைது செய்ய விடுக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராகத் தாம் செய்த மேன்முறையீட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ள நிலையில் நீதிமன்றத்தின் முன்னால் முன்னிலையாவதைத் தவிர தேசபந்து தென்னக்கோனுக்கு வேறு மாற்று வழி இல்லை” – என்று ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

நீதிமன்றத்தில் கைதாகும் சூழ்நிலையை அவர் ஏற்படுத்தக் கூடும் என்பதும் அந்தப் பத்தியில் கோடி காட்டப்பட்டிருந்தது.


அதேபோல நேற்றுக் காலை அவர் மாத்தறை நீதிமன்றத்தில் நேரில் சரணடைந்திருக்கின்றார்.

அதுவல்ல விடயம். அவர் நீதிமன்றத்தில் சரணடைந்ததிலிருந்து, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்க மறியலுக்கு அழைத்துச் செல்லப்பட்டமை வரை எந்த விடயமும் யாருடைய கமராவுக்குள்ளும் சிக்கவில்லை. அத்தகைய கடுமையான மூடு திரை வலைப் பின்னல் பாதுகாப்பு போட்டு தேசபந்து தென்னக்கோனுக்கு 06



# இம்முறை பெண் வேட்பாளர்களை காடுமேடெல்லாம் தேடவில்லையாம்

## இப்படி சுமந்திரன் கூறுகின்றார்




(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறக்கப்படும் பெண் வேட்பாளர்களுக்காகக் காடுமேடெல்லாம் தேட வேண்டிய அவசியம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஏற்படவில்லை என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களை யாழ்ப்பாணத்தில் நேற்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குச் சுமந்திரன் கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது, நாடாளுமன்றத் தேர்தலில் பெண் வேட்பாளர்களைக் கண்டடைய காடுமேடெல்லாம் தேடியதான சுமந்திரனின் கருத்துக் குறித்து ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த முறை காடுமேடெல்லாம் பெண் வேட்பாளர்களைத் தேட வேண்டி இருக்கவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்டிருந்த நிலையில் கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக ஏற்கனவே வேட்புமனுத் தாக்கல் செய்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இம்முறை பெண் வேட்பாளர்களுக்காக காடுமேடெல்லாம் அலைய வேண்டிய தேவை இருக்கவில்லை.” – என்றார்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரால் சுற்றுநிரூபம் வெளியீடு

பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் 30 நாள்களுக்குள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் இருந்தால் அவரது அசையும் அசையா சொத்துக்களை தடை செய்யும் உத்தரவை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டுமென பதில் பொலிஸ் மாஅதிபரினால் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் விசேட சுற்றுநிரூபம் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளின் பிரகாரம் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் பதில் பொலிஸ் மாஅதிபரினால் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரது சொத்துக்கள் தடை செய்யப்பட்ட நாள் முதல் ஒரு வருட காலப்பகுதிக்குள் நீதிமன்றத்தில் மேற்படி நபர் ஆஜராகும் பட்சத்தில் சொத்துக்களை விற்பனை செய்ய அல்லது சொத்துக்களை விற்பனை செய்து பெறப்பட்ட வருமானத்தை அவருக்கே மீள வழங்குவதற்கான விதிமுறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் செயற்பட வேண்டுமென்பதுடன் இந்த நடவடிக்கைகளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டுமெனவும் சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனக ரத்னாயக்கவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவிப்பு



தனது செயலாளராகப் பணியாற்றிய பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தி அது தொடர்பான காணொலியை பதிவேற்றுவதாக அச்சுறுத்திய சம்பவத்தில் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்னாயக்கவை சந்தேநபராக பெயரிடவிருப்பதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி பிரிவு இந்த அறிவிப்பை கொழும்பு – கோட்டை நீதவான் நிலுபுலீ லங்காபுரவிடம் முன்வைத்துள்ளது.

இதற்கமைய, அடுத்த மாதம் 2ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்னாயக்கவிற்கு நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது.



# பட்டலந்த விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேநேரம், தமிழ் மக்கள் மீது 1956 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வரை நடந்த இனப்படு கொலைகள் தொடர்பில் நீங்கள் விவாதம் நடத்த வேண் டும் . விசாரணை செய்ய வேண்டும். நீதி வழங்க வேண் டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் வலியுறுத்தினார்.

"பட்டலந்தை மட்டுமல்ல இந்த நாட்டில் வடக்கு, கிழக்கில் பல பகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புக்கூடுகளைக் காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனித் தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும், மனித நேயத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்க வேண்டும்." – என்றும் அவர் வலியுறுத்தினார்

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் வர்த் தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய சிறீதரன் எம்.பி. மேலும் பேசுகையில்,

"பட்டலந்த வதை முகாம் தொடர்பான செய்திகள் மிகப் பரவலாக வெளிவருகின்றன. பட்டலந்த என்பது 1988, 1989ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் இருந்த ஜே.வி.பி. போராளிகளை கைது செய்து கொண்டு சென்று அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை இவ்வளவு காலமும் கிடப்பில் இருந்து, இப்போது அல்ஜசீரா வுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பேட்டிக்குப் பின்னர் அந்த அறிக்கை வெளியில் வந்துள்ளது.

ஆனால் 88ஃ89இல் நடந்த ஜே.வி.பி. மீதான படுகொலை கள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா.வில் அறிக்கை யொன்றையும் சமர்ப்பித்துள்ளார். ஜே.வி.பி. மீதான படு கொலைகள் தொடர்பான செய்தியை அவர் அங்கு கொண்டு சென்றிருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் இதற்கான தீர்வு கள் எட்டப்படவில்லை. ஜே.வி.பி. அடுத்து வந்த ஆண்டுக ளில் சந்திரிகாவுடன் இணைந்து ஆட்சி செய்த போதும் பட்ட லந்த படுகொலைகள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளையும் விடுக்கவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. அந்த விட யத்தை இப்போது கையில் எடுத்திருப்பது நியாயமானது. இது தொடர்பில் விசாரணை வேண்டும். நாட்டில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நீதி வேண்டும்.

கதிர்காமத்து அழகி பிரேமாவதி மனம்பேரியை சொந் தச் சகோதர இராணுவத்தினரே நிர்வாணமாக்கி படுகொலை செய்தார்கள் என்பது உலக வரலாற்றில் மிகக் கேவலமான பதிவாக உள்ளது. அவ்வாறான இந்த நாட்டில் அதற்கு நீதி வேண்டும் என்று நான் பல தடவைகள் கூறியுள்ளேன்.

அதேபோன்று தமிழ்த் தேசிய இனம் சார்ந்த இசைப் பிரியா, கிருஷாந்தி போன்றோர் பாலியல் வன்புணர்வுக்குப் பின னர் அவர்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட னர். அவர்களுக்கான நீதி விசாரணைகளையும் நாங்கள் பல இடங்களில் கோருகின்றோம். தமிழர்களுக்கு நடந்தது மிகப்பெரிய இனப்படுகொலை. ஆனால், சிங்கள மக்களுக்கு அவர்களின் எழுச்சி, கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த வதை முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளில் தமி ழர்கள் மீது படிப்படியாக பல இடங்களில் படுகொலை முயற்சிகள் இடம்பெற்றன.

குறிப்பாக 1956 – 1958 காலப்பகுதியில் இலங்கையில் தமிழினம் மீது நடந்த மிகப்பெரிய இனப்படுகொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 1970, 1976 காலப்பகு தியில் நடந்த மிகப்பெரிய இனப் படுகொலைகளும் பதிவா கியுள்ளன. அத்துடன் 1983இல் நடந்த ஜுலை படுகொலை மிகப் பெரிய இனப்படுகொலையாக உலக அரங்கில் பார்க்கப்படுகின் றது.

அதன்பின்னர் 2006இல் வாகரையில் நடந்த இனப்படு கொலை, 2009இல் முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி இனப்படுகொலை என்பன இந்த நாட்டில் மிகவும் முக்கி யமானவையே. இதற்கான விசாரணைகள் எதுவும் நடை பெறவில்லை.

நாங்கள் பாதிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட ஓர் இனம். உணவுகூட அனுப்பாமல் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 4 இலட்சத்து 20ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இறுதி யுத்தம் நடைபெறும் போது, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு பகுதியில் இருந்தனர். ஆனால், 70 ஆயிரம் பேரே இருக்கின்றனர் என்று அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூறி, 70ஆயிரம் பேருக்கான உணவுப் பொருட்களையே அனுப்பினர். இதில் எத்தனை பேர் பட்டினியால் கொல்லப்பட்டிருப்பார்கள். இது



தமிழ்த் தேசிய இனம் மீதான மிகப்பெரிய இனப்படுகொலை யாக இந்த உலகத்தால் பார்க்கப்படுகின்றது.

கனடா நாடு இந்த விடயத்தில் தனது கரிசனையை கொண் டுள்ளது. அங்குள்ள இரண்டு கட்சிகள் இங்கு நடந்தவை இனப்படுகொலை என்று ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளன. சர்வதேச அடிப்படையில் இந்த விடயம் பேசப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால், இங்கு நடைபெற்றது இனப்படுகொலை இல்லை என வாதிடுகின்றீர்கள். அது பற்றி பேசுவதில்லை. ஆனால், பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்கு தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்க வில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாகக் கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதனை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.

அதேநேரம், தமிழர்களுக்கு நடந்த இனப்படுகொலை தொடர்பில், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான படுகொலை தொடர்பில் ஏன் இந்த அரசால் சரியான முடிவை எடுக்க முடியவில்லை. 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர மனித உரிமைகள் பேரவையில் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். பன்னாட்டு நீதியாளர்களின் ஆலோசனைகளை பெறுகின் றோம், தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்கின்றோம், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு நீதி காண்பதற்கு கலப்பு பொறிமுறையை கையாளுகின்றோம் என்று ஏற்றுக் கொண்டார். ஓர் அரசு இருக்கும் போது ஏற்றுக்கொண்டதை கோட்டாபய வந்ததும் நிராகரித்தார். இந்த அரசும் வந்த போது இதனை எதிர்த்து நிராகரித்துள்ளனர்.

நாங்கள் இந்த மண்ணில் உங்களுடன் சேர்ந்து வாழ்வ தற்கு விரும்புகின்றோம். இதனை நாங்கள் பல தடவைகள் பதிவு செய்துள்ளோம். ஆனால், நீங்கள் நீங்களாகவும், நாங்கள் நாங்களாகவும் எங்களுடைய தனித்துவங்கள், அடையாளங்கள் நிராகரிக்கப்படாமல் வாழ்வதற்கான உரி மைகள் இந்த மண்ணில் இருக்க வேண்டும். அது சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வாகத்தான் அமைய முடியும். ஒற்றையாட்சி இலங்கைக்குள் இந்தத் தீர்வு ஒரு இனத்தை இன்னுமொரு இனம் சுரண்ட முடியாமல், கபளிகரம் செய்ய முடியாமல் மற்றும் அடக்காமல் இருப்பதற்கான வழிமுறை ஒற்றையாட்சிக்குள் உருவாக முடியாது. ஆனால், ஒரு நாடாக இருப்பதற்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பது, அந்த நாட்டில் வாழும் பல்தேசிய இனங்களை

05

## பட்டலந்த விசாரணை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அரவணைத்து செல்வதற்கான மிகப்பெரிய பாதையாக மாறும்.

பட்டலந்த வதை முகாம் எல்லோருடைய இரத்தத்தையும் உறைய வைத்துள்ளது. அங்கு நடந்தது குற்றமென்றால் அது நிரூபிக்கப்படவும், உரியவர்கள் கைது செய்யப்படவும் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதேபோன்று நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏன் விசாரணை செய்ய தயங்குகின்றீர்கள்? அத்துடன் நாகர்கோவிலில் நடந்த படுகொலைகள், மண்டைதீவில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பில் ஏன் நீங்கள் சிந்திக்க தவறுகின்றீர்கள்? குமுதினி படகில் கொல்லப்பட்ட மக்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது? குருநகர் கடலில் கொல்லப்பட்டவர்களுக்கு, கொக்கட்டிச்சோலையில் கொல்லப்பட்டவர்களுக்கு, வாகரையில் கொல்லப்பட்டவர்களுக்கு, திருகோணமலையில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது?. நெடுங்கேணி – ஒலுமடுவில், அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்தது?

கொத்துக்கொத்தாகப் பல இடங்களில் கொல்லப்பட்டு அழிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் நிலங்களை இழந்துள்ளது. இன்னும் தமது சொந்த இடங்களுக்கு போக முடியாமல் மக்கள் இருக்கின்றனர். பௌத்த தேவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. அந்த பிரதேசங்களின் காணிகளை பௌத்த இடங்களுக்குரிய காணி என்று கூறுகின்றனர். இன்னும் காணிகள் எடுக்கப்படுகின்றன. நாட்டின் நீதி என்ன? நீதி எவ்வாறு கிடைக்கும்?

யாழ். செம்மணி சுடலையில் மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அதற்கான நீதி இன்னும் வெளிவரவில்லை. அண்மையில் முல்லைத்தீவு குமுளமுனை பகுதியில் வீதி அகலப்படுத்தும் பணியின்போது இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவை இறுதி யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டவர்களினதாக இருக்கலாம் என்று தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். பெண் போராளிகளின் உள்ளாடைகளுடனும், இலக்கத்தகளுடனும் அவை அந்த புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தாக்கப்பட்ட விதத்தைக்கூட தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் வாயைத் திறந்த நிலையில் புதைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். எவ்வளவு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம்.

பட்டலந்தை மட்டுமல்ல இந்த நாட்டில் வடக்கு, கிழக்கில் பலபகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புகூடுகளை காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும், மனித நேயத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்க வேண்டும்.

மனிதர்களை கொல்வதில் மிகப்பெரிய குற்றமான உணவு அனுப்பாமல் கொல்லுதல், அவர்கள் மீது பராச் குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும், பொஸ்பரசு குண்டுகளையும் வீசி கொல்லுதல், மிகப்பெரிய தடை செய்யப்பட்ட ஆயுதங்களை பாவித்தல் என்பன மிகப்பெரிய போர்க் குற்றங்களாகும். வாகரையிலும், முள்ளிவாய்க்காலிலும் மிகப்பெரிய அளவில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த குண்டுகளின் அடையாளங்களுடன் மக்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

படைகளிடம் பலர் உயிருடன் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குறைவாக நிறுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு உணவுகளை அனுப்பிய போது எத்தனையோ ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

எத்தனையோ ஆயிரம் குழந்தைகள் தமிழர் புனர்வாழ்வு கழகம் வழங்கிய கஞ்சிக்காக சின்ன சின்ன கிண்ணங்களுடன் வரிசையில் இருந்த போது பராச் குண்டுகளில் சிக்கி கொல்லப்பட்ட வரலாறு அந்த மண்ணில் இடம்பெற்றுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட இனத்தின் சார்பாக அதனை நேரில் கண்டவன் என்ற வகையில் கூறுகின்றேன். தயவு செய்து நீதி விசாரணையை எல்லாவற்றுக்கும் கொண்டு வாருங்கள். அந்த மக்கள் நம்பக்கூடிய வகையில் அதனை செய்யுங்கள். அதுவே நல்ல செய்தியாக அமையும்.

பட்டலந்தவில் உங்களுடைய போராளிகளுக்கு நடந்தவற்றை மட்டும் விசாரணைக்கு உட்படுத்துவது ஒரு பக்கச்சார்பானதாக மாறும். உங்களை நாங்கள் ஜே.வி.பி. போராளிகளாகவே பார்த்தோம். உங்களைப் பயங்கரவாதிகளாக பார்க்கவில்லை. ஜே.வி.பி. போராளிகள் கிளர்ச்சியாளர்கள் என்று கூறினாலும் உங்களுக்காக இரக்கத்துடன் பேசியவர்கள் நாங்கள். களனி ஆற்றில் ஜே.வி.பி. இளைஞர்கள் கழுத்து வெட்டப்பட்டு மிதந்து வந்தபோது அவற்றைப் பார்த்து கவலையடைந்தவர்களில் தமிழர்கள் முக்கியமானவர்கள். எவர் கொல்லப்பட்டாலும் அதற்கான விசாரணை வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

பட்டலந்தவில் இருந்த வதை முகாம் ஒரே இனத்துக்குள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள். ஆனால், எங்கள் மீது திட்டமிட்டு 80 வருடங்களாக மெல்ல மெல்ல எமது நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல இலட்சமான மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். உணவு அனுப்பாமல், தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி இனப்படுகொலை செய்தனர். இதனால் தமிழ்த் தேசிய மக்கள் மீதான இனப்படுகொலை மிகவும் கருத்தில் கொள்ள வேண்டியது. இதற்கான நீதி விசாரணை வேண்டும். பட்டலந்த என்ற சொல்லில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இனப்படுகொலையை மறைத்து விட வேண்டாம். அது சர்வதேச அளவில் பேசப்படும் பொருள்.

இறுதி யுத்தம் நடைபெற்ற போது பல நாடுகளின் செய்மதிகள் இங்கு நடந்த படுகொலைகளை மிகத்துள்ளியமாகப் படம் பிடித்து வைத்துள்ளன. உலக நாடுகளிடம் இருக்கும் ஆதாரங்கள் மற்றும் ஆவணங்கள் தமிழ் மக்களின் சாட்சியங்களாக இருக்கின்றன. இதன்படி சரியான நீதி விசாரணை வேண்டும்.

இந்த நாட்டில் உங்களின் கலாசாரம், பண்பாடு, அடையாளம் என்பனவற்றை மதிக்கின்றோம். உங்களுடன் சேர்ந்து வரத் தயாராக இருக்கின்றோம். அதேபோன்று தமிழர்களுடைய தனித்துவம், அவர்களின் தேசிய அடையாளம், கலாசார அடையாளம் என்பனவற்றைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கான நீதியை வழங்க வேண்டும். அதற்குத் தயாராகுங்கள்.

இப்போது முக்கிய சாட்சியாகக் காணாமல்போனோரின் உறவினர்களின் போராட்டங்கள் மூவாயிரம் நாட்களையும் கடந்து வீதிகளில் நடக்கின்றன. அவற்றைக் கருத்தில் எடுத்து நீதிக்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும், அவை உண்மையை கொண்டுவர வேண்டும்.” – என்றார்.

## மருதங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையம், இரண்டு பாடசாலைகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சை நிலையத்தில் நேற்றுக் காலை 7:30 மணியளவில் இரண்டு பாடசாலைகளின் மாணவர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. முறுகல் கைகலப்பாக மாறியிருந்த நிலையில் பரீட்சை நிலையக் கண்காணிப்பாளர்களால் கட்டுப்படுத்தப்பட்டது.

ஆனாலும், முதலாம் பகுதி வினாத்தாள் நேரம் முடிவடைந்த நிலையில் நண்பகல் 11:15 மணியளவில் வெளியில் இருந்து ஒரு குழுவினர் பரீட்சை நிலைய வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து ஒரு தரப்பு மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து பரீட்சை நிலைய மேற்பார்வையாளரினால் மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த மருதங்கேணி பொலிஸார், சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தொடர்ந்து பரீட்சை நிலைய மேற்பார்வையாளர், எழுத்து மூலமாக பரீட்சை நிறைவு பெறும் வரை பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கோரி முறைப்பாடொன்றை மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வழங்கினார்.

இதனையடுத்து பரீட்சை நிறைவடையும் வரை நடமாடும் பொலிஸ் பாதுகாப்பை வழங்க முன்வந்துள்ள மருதங்கேணி பொலிஸார், மேற்படி சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படக்கூடிய அகௌரவங்களில் இருந்து அவரை நுணுக்கம் பார்த்துக் காப்பாற்றி இருக்கின்றது அவருக்கு விசுவாசமான அவரது பொலிஸ் துறை.

அநுரகுமார அரசும், அவரது பொலிஸ் திணைக்களத்தைக் கையாளும் அமைச்சரும், அரசு தரப்பு அரசியல்வாதிகளும் விசேடமாகக் கவனத்தில் எடுக்க வேண்டிய அம்சங்கள் இத்தகைய நுணுக்கமான திரை மறைப்பு நடவடிக்கைகளுக்குள் பொதிந்திருப்பதாக கருதுகிறோம். ஆளுந்தரப்பு இதனைக் கவனித்தால் நல்லது.

அதே சமயம் பாதுகாப்புத் துறையில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து இந்த அரசு கவனத்தில் கொள்கின்றதா என்று ஒரு கேள்வி எழுகின்றது. உதாரணத்துக்கு ஒரு விடயத்தை சொல்லி வைக்க விரும்புகிறோம்.

நாகைப்பட்டினம் – காங்கேசன்துறை இடையே 'சிவகங்கை' கப்பல் பயணிகள் சேவையில் ஈடுபடுகின்றது. அந்தக் கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரும்போதும், அங்கிருந்து புறப்படும் போதும் அதனை துறைமுக வாசலில் இருந்து உள்ளே அழைத்து வரவும், உள்ளே இருந்து துறைமுக வாசலைக் கடந்து செல்ல அழைத்துச் செல்லவும் 'பைலட் படகு' ஒன்று சேவையில் ஈடுபட வேண்டும். கடற்படை படகு ஒன்றே இந்த பணியை ஆற்றி வருகின்றது. இந்தப் பணியை ஆற்றும் கடற்படை படகுக்கு ஒவ்வொரு சேவைக்கும் நிபுணத்துவக் கட்டணமாக 24 டொலர் அறவிடப்படுகிறது. கப்பல் வந்து சென்றால் 48 டொலர்.

இந்தக் கட்டணத்தை செலுத்தும்படி திகதி வாரியாகக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்துக்கு வடக்குக் கடற்படை தலைமையகத்தில் இருந்து அவ்வப்போது கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

கப்பல் ஒவ்வொரு நாளும் வந்து போகும்போது 48 டொலருக்குச் சமனான சுமார் பதினையாயிரம் ரூபா பணத்தை (அன்றைய டொலர் பெறுமதிக்கு ஏற்ப இலங்கைப் பணத்தில்) மேற்படி வடக்கு கடற்படை தலைமையகத்தின் கட்டளைத் தளபதியின் சொந்தப் பெயரில் கண்டியில் ஒரு வங்கிக் கிளையில் உள்ள கணக்குக்கு அனுப்பும்படி வடக்குக் கடற்படை தலைமையகக் கடிதத் தலைப்பில் சிவகங்கை படகுச் சேவையில் ஈடுபடும் நிறுவனத்துக்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன என்று தெரிய வருகின்றது.

ஒவ்வொரு நாள் சேவைக்கும் சராசரி பதினையாயிரம் ரூபாய் வரை அறவிடப்படுகின்றது. இந்தப் பணத்தை கட்டளை தளபதியின் சொந்த வங்கிக் கணக்குக்கு அனுப்பும்படி கப்பல் கம்பனிக்கு வடக்கு கடற்படை தலைமையகத்தில் இருந்து அதன் கடிதத் தலைப்பில் கடிதம் அனுப்புவது எங்ஙனம் நியாயம் என்று தெரியவில்லை.

அரச வரும்படி ஒரு கட்டளைத் தளபதியின் சொந்தக் கணக்கிற்கு ஏன் போகின்றது? தெரியவில்லை.

அநுர குமார அரசின் லஞ்ச, ஊழல் விசாரணைப் பிரிவு விரைந்து கவனிக்க வேண்டிய விடயம் இது.

தன்னுடைய படை அதிகாரிகளைக் காப்பாற்றும் – பொறுப்புக் கூறலை எப்போதும் மூடி மறைக்கும் – ஓர் அரசாங்கம் இந்த விடயத்திலும் அப்படி நடந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

\+ + +

நேற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்காக யாழ் மாவட்ட செயலகத்தில் இதற்காக அமைக்கப்பட்ட விசேட கரும பீடத்துக்கு வந்த இரண்டு கட்சித் தரப்பினர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றிருக்கிறார்கள்.

நேற்று வேட்பு மனு ஏற்கும் பணி முடிவடைந்து, சற்று நேரத்தின் பின்னர் மாலை 4:15 மணி போல – தாமதித்து வந்த – தமிழ் மக்கள் கூட்டணியில் பிரமுகர் மணிவண்ணன் அதனால் திருப்பி அனுப்பப்பட்டார்.

அதேபோல யாழ் மாவட்டத்தின் 17 சபைகளுக்கும் வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்த டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. குழுவினர் தங்கள் வேட்பாளர் பட்டியலில் போட்டியிடும் இளையோரின் வயது நிலையை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர்களின் பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதிகளை தங்களுடன் எடுத்து வராத சூழ்நிலையில், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடியாது திரும்பிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 17 சபைகளிலும் போட்டியிடும் இளையோர்களின் பிறப்புச் சான்றிதழ்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முதல் சேகரித்து, அவற்றுடன் வந்து மனுக்களை தாக்கல் செய்ய வேண்டிய நெருக்கடி இப்போது ஈ.பி.டி.பிக்கு ஏற்பட்டுள்ளது. என்ன செய்யப் போகின்றார்கள் என்பது இன்று மதியம் தெரிந்துவிடும்.

---

## புதிய கூட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படாது என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களை யாழ்ப்பாணத்தில் நேற்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இவ்வளவு காலமும் தாங்கள் மட்டுமே புனிதமானவர்கள் என்று தேர்தலில் போட்டி போட்டுக் கொண்டிருந்தவர்கள் தங்கள் நிலைமையை உணர்ந்து ஒரு சிலரோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்றனர். இப்படியாகத்தான் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் ஒன்பது கட்சிகளின் கூட்டு, பத்து கட்சிகளின் கூட்டு எனப் பல கூட்டுகள் வந்தன. தப்பித் தவறி ஒருவர் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார். எந்தவித தாக்கத்தையும் இந்தக் கூட்டு செலுத்தாது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களை யாழ்ப்பாணத்தில் இன்று (நேற்று) தாக்கல் செய்திருக்கின்றோம். மிகுதி 12 சபைகளுக்கான வேட்பு மனுக்களை நாளை (இன்று) காலை சமர்ப்பிப்போம்.

நிறைந்த போட்டியின் மத்தியிலே வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டியதாக இருக்கின்றது. அதனால் சற்று நேரம் தாமதித்துத்தான் இறுதி செய்து கொண்டிருக்கின்றோம்.

கட்சியினுடைய தீர்மானத்தின் படி எந்த ஒரு சபைக்கும் மேயரோ, தலைவரோ, தவிசாளரோ அறிவிக்கப்படப் போவதில்லை. தேர்தலுக்குப் பிறகுதான் அது சம்பந்தமாக கட்சி முடிவு எடுக்கும்.

உள்ளூராட்சி சபைகளில் தனித்து ஆட்சி அமைக்க முயற்சிக்கிறோம். ஆனால், எல்லாருக்கும் தெரிந்த விடயம் இந்தத் தேர்தல் முறைமையில் எந்தக் கட்சியாக இருந்தாலும் தனித்து ஆட்சியமைப்பது கடினமான விடயம். ஆனாலும், நாங்கள் முயற்சி செய்கின்றோம்.

பெரும்பான்மை கிடைக்காத இடங்களில் அந்தந்தச் சபைகளில் வேறு யாருக்குப் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கின்றது என்பதைப் பொறுத்து நாங்கள் தீர்மானிப்போம்." – என்றார்.

---

## எம்மைப் பலப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்கின்ற ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கு இன்று (நேற்று) வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளோம். ஏனைய எட்டு உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களை நாளை (இன்று) மதியத்துக்குள் தாக்கல் செய்வோம்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பு முழுவதற்கும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய அத்தனை சபைகளுக்கும் சைக்கிள் சின்னத்தில் தமிழ்த் தேசிய பேரவை என்ற பெயரில் எங்களுடைய கூட்டணியை உருவாக்கியுள்ளோம்.

இந்த முயற்சி கொள்கை அடிப்படையில் எங்கள் மட்டத்திலே ஏற்பட்ட இணக்கப்பாடு காரணமாக முன்னெடுக்கப்படுகின்றது. எம்மைப் பொறுத்தவரையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிற்பாடு தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்த வேண்டிய ஒரு கட்டாயத் தேவை தென்படுகின்றது.

அந்தவகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் பேச்சுகளை ஆரம்பித்திருந்தது. ஆனால், துரதிஷ்டவசமாக அந்தப் பேச்சுகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒருதலைப்பட்சமாக எந்தவிதமான நியாயமும் இல்லாமல் முறித்தது.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியினுடைய தலைவரோடு நாங்கள் பேச்சுகளை நடத்திக்கொண்டிருந்தாலும் கூட அவருடைய அந்தக் கூட்டணி எங்களைத் தவிர்த்து தமிழ்த் தேசியத்துக்கு மாறாகச் செயற்பட்ட ஒரு சில தரப்புகளையும் சேர்த்து கூட்டணி முயற்சியொன்றை எடுக்க ஆரம்பித்தார்கள்.

அந்தப் பின்னணியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வரவு – செலவுத் திட்டம் தொடர்பான வாக்கெடுப்புக்கு ஆதரவு வழங்கியது உள்ளிட்ட சில குறிப்பிட்ட காரணங்களால் தமிழ்த் தேசியக் கட்சி அதிருப்தி அடைந்து கொள்கை வழியிலேயே எங்களோடு சேர்ந்து பயணிக்க விரும்பினார்கள். நாங்களும் அதனை விரும்பினோம்.

ஜனநாயகத் தமிழரசுக் கட்சியினுடைய உறுப்பினர்களும் எங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்குப் பேச்சில் ஈடுபட ஆரம்பித்தார்கள். அவர்களும் தற்போது ஒன்றாகப் பயணிக்க முடிவெடுத்திருக்கின்றார்கள்.

ஐங்கரநேசனுடைய தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் எங்களுடன் இணைந்துள்ளார்கள்.

அதேபோன்று அருந்தவபாலன், தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக அறிவித்திருந்தாலும் கூட அவரும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் ஒற்றுமையாகப் பயணிப்பதற்கு ஒரு முயற்சி ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று விரும்பினார். அந்தவகையில் எங்களுடைய இந்த முயற்சியோடு அவரும் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் நாங்கள் ஒரு கூட்டணியை ஆரம்பித்துள்ளோம். இந்த முயற்சி எதிர்காலத்தில் பலமடையும் என்று நம்பிக்கையிலே நாங்கள் இருக்கின்றோம்.

கொள்கை அடிப்படையில் இந்த முயற்சியை நாங்கள் முன்கொண்டு செல்வோம்.

இந்தக்கூட்டுமுயற்சியைநாங்கள்எடுத்தபோதும் ஆசனங்களுக்கோ, எண்ணிக்கைகளுக்கோ அடிபட்டு செயற்பட்டதாக இல்லை. பெரும்பான்மையான விட்டுக்கொடுப்போடு இந்த வேட்பாளர் பட்டியலைத் தயாரித்திருக்கின்றோம்.

இந்தப்பட்டியல்விவரங்கள்வெளிவரும் போது அனைவரும் இதனை ஏற்றுக் கொள்வார்கள்." – என்றார்.

# உள்ளூராட்சி தேர்தல் திகதி இன்று அறிவிக்கப்படும்




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி இன்று அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலப்பகுதி நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

அதேநேரம் வேட்புமனுக்கள் இன்று நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், அவற்றை முன்வைக்க ஒன்றரை மணி நேரம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்த பிறகு, பேரணிகள் அல்லது வாகனப் பேரணிகளை நடத்துவது தேர்தல் சட்டத்தின் கீழ் முரணானது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# புலமைப் பரிசில் திருத்தப் புள்ளிகளின்படி பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு



2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் மீளத் திருத்தம் செய்யப்பட்ட பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

திருத்தம் செய்யப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தற்போது சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் அதிபர்களுக்கு உரிய விண்ணப்பப் படிவம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்விண்ணப்பப் படிவத்தைத் தரம் 05 இல் கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுப் பெற்றோர் அதனை முறையாக பூரணப்படுத்த வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அதிபரிடம் மீண்டும் கையளிக்க வேண்டும் என்பதுடன், அதிபர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் நிகழ்நிலை முறையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் மீளத் திருத்தம் செய்யப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கும் உரிய அதிபர்களுக்கும் இது தொடர்பில் கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் நெருக்கடி

2022 இல் மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இலங்கை மூழ்கிய சமயத்தில் கூட, அதற்கு மூச்சு விடக் கூடிய அளவுக்கு அந்நிய செலாவணி வருமானத்தை தடைப்படாமல் தொடர்ந்து தேடித்தரும் விவகாரமாக இருந்தது ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ஆகும்.

ஐரோப்பிய நாடுகளுக்கான தைத்த ஆடை உட்பட பல முக்கிய பொருகளை வரிவிதிப்பின்றி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை உட்பட சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளுக்கு மாத்திரம் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த வரிச்சலுகை பிரத்தியேகமாகக் கிடைப்பதனால் ஏனைய மற்ற நாடுகளோடு போட்டி போட்டுக் கொண்டு, குறைந்த விலையில் கணிசமான அளவு பொருள்களை ஏற்றுமதி செய்து, அந்நிய செலாவணியைத் தாராளமாக பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இலங்கைக்கு கிட்டி வருகின்றது. இலங்கையில் உள்ளூர் உற்பத்தியும் அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டும் தொழிலாக விஸ்வரூபம் எடுத்து வருகின்றது.

தொழிலாளர்கள் நலன்கள் மற்றும் மனித உரிமைகளை உரிய முறையில் பேணுதல், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை பாதுகாப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் கையாளுதல், நல்லாட்சியை உறுதிப்படுத்துதல் ஆகிய 27 முக்கிய சர்வதேச விடயங்களை குறையாத தரத்தில் பேணுகின்ற நாடுகளுக்கே இந்த விசேட வரி விலக்கு சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வருகின்றது.

2007 வரை இலங்கைக்கு கிட்டிய இந்த வசதியை - விசேட சலுகையை - அப்போதைய ராஜபக்ஷ அரசின் மனித உரிமை மீறல்கள் நிறைந்த கொடுங்கோல் ஆட்சியைக் கருத்தில் கொண்டு அடியோடு வெட்டியது ஐரோப்பிய ஒன்றியம்.

எனினும் 2015இல் ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு ஐரோப்பிய ஒன்றியத்தின் கைகள், கால்களில் விழுந்து ஒருவாறு அந்தச் சலுகையை மீண்டும் பெற்றுக் கொண்டது. கொடூரமான பயங்கரவாத சட்டத்தை திருத்துதல் உட்பட பல்வேறு வாக்குறுதிகளை கொடுத்தே இந்த வசதியை இலங்கை மீண்டும் 2017 இல் பெற்றுக் கொண்டது. ஆயினும், 8 ஆண்டுகள் கடந்தும் முக்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் அடுத்த மாத இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு இந்த விடயத்தை ஒட்டிய மீளாய்வுக்காக இலங்கைக்கு வருகின்றது.

அதனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்தல், இணைய வழி பாதுகாப்பு சட்டத்தில் உள்ள தவறான ஏற்பாடுகளை திருத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை செய்ய வேண்டிய நெருக்கடி இப்போது இலங்கை அரசுக்கு வந்திருப்பதாக கூறப்படுகின்றது.

கடப்பாடுகள் நிறைவேற்றப்படாவிட்டால் வரிச் சலுகை வசதியை விரைவாக திரும்பப் பெறுவதற்கான நடைமுறை உட்பட 2027 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய வழிகாட்டுதல்களை ஐரோப்பிய ஒன்றியம் அறிமுகப்படுத்த உள்ளது என்றும் கூறப்படுகின்றது.

நல்லாட்சி, தொழிலாளர் நலன், மனித உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும்காலநிலைபாதுகாப்புபோன்றவை தொடர்பான 27 விடயங்களிலும் தான் செய்ய வேண்டிய கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றாவிடில் அடுத்த இரண்டு ஆண்டுக்குள் - 2027 இல் - இந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீண்டும் பறிபோகும் ஆபத்து நெருக்கடி இலங்கைக்கு ஏற்படலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அநுரா அரசுக்கு நெருக்கடி காத்திருக்கின்றது என்பதுதான் இதன் அர்த்தம்.









# அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்திற்கு ஜனாதிபதி அநுரவுக்கும் இடையில் சந்திப்பு

தொழிற்சங்கங்களின் கோரிக்கையோ அழுத்தமோ இன்றி வரலாற்றில் அரசாங்கமொன்றினால் மிகக் கூடிய சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை ஏற்க முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்திற்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வரையறுக்கப்பட்ட செலவுகளுக்கு உட்பட்டிருக்கும் தற்போதைய பொருளாதார நிலையிலும் கூட அரச சேவையை வினைத்திறனாக ஈடுபடுத்தல், தகைமையுள்ள நபர்களை அரச சேவைக்கு ஈர்த்துக் கொள்ளல் மற்றும் அரச சேவையை ஊக்குவிப்பதற்காக இம்முறை வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 06 முறைமைகளில் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, அதன் பிரகாரம் மிகக் குறைந்த அடிப்படை சம்பளத்தை 15 000 ரூபாவினால் அதிகரித்தல், மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகரித்தல், விடுமுறை நாள் கொடுப்பனவு அதிகரித்தல், 80 வீதத்தினால் வருடாந்த சம்பள அதிகரித்தல், முழுமையான சம்பள அதிகரிப்பிற்கு அமைய ஓய்வூதிய கொடுப்பனவை அதிகரித்தல் மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி எல்லையை அதிகரித்தல் என்பவற்றை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த சம்பள அதிகரிப்பு அரச சேவையில் அதிகளவானவர்களால் பாராட்டப்படுவதாகவும், அது தொடர்பில் புதிய அரசாங்கத்தின் ஆர்வத்தைப் பாராட்டுவதாகவும் ஜனாதிபதியிடம் கூறிய அரச சேவை ஐக்கிய தாதியர் சங்க பிரதிநிதிகள், தாதியர் சேவையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு அவற்றுக்கு துரித தீர்வு பெற்றுத் தருமாறும் கோரினர்.

இதன்போது கொழும்பு பல்கலைக்கழக வேந்தர், மேல் மாகாண தலைமை சங்க நாயக்கர், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவருமான வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# விசேட வைத்திய நிபுணர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

இந்த வருட வரவு செலவுத் திட்டம் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் ரீதியாகவும் திட்டமிடப்பட்ட முறையிலும் செயல்படுத்தப்படும் வரவு செலவுத் திட்டமாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

கடன்களை திருப்பிச் செலுத்தும்போது பொருளாதாரத்தில் ஏற்படும் ஆழமான தாக்கத்தைக் கருத்தில் கொள்ளாமல் வரலாற்றில் பல்வேறு அரசாங்கங்கள் கடன் பெற்றுள்ளன என்றும், தமது அரசாங்கம் அத்தகைய முறைசாரா கடன் பெறவோ அல்லது முறைசாரா பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதோ இல்லை என்றும், தனது அரசாங்கம் பொருளாதார ஸ்தீரநிலையில் அதிக கவனம் செலுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி இந்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டினார்.



விசேட வைத்திய நிபுணர் சேவைக்கான சேவை யாப்பு தயாரிப்பது மற்றும் தொழில்சார் பிரச்சினைகள் குறித்து விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகளினால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அடிப்படைச் சம்பள அதிகரிப்பு, அதிகரித்த முழுமையான சம்பளத் திற்கு ஏற்ப இந்த ஆண்டு ஓய்வூதிய கொடுப்பனவு அளவு அதிகரிப்பு, கொடுப்பனவுகள் வழங்குதல் மற்றும் வருமான வரி எல்லையை அதிகரிப்பு என்பன தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு விசேட வைத்திய நிபுணர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பு உட்பட பல திட்டங்கள் அடங்கிய பரிந்துரையை விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு சமர்ப்பித்தனர்.

இந்த சந்திப்பில், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் டி.கே.எஸ்.என். யசவர்தன மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



# ஒரு நாளுக்கு தேவையான அரிசியைக் கூட அரசாங்கம் கொள்வனவு செய்யவில்லை

## டி.வி.சானக குற்றச்சாட்டு



இலங்கையில் நாளொன்றுக்கு போதுமான அரிசியை கூட அரசாங்கம் இம்முறை கொள்வனவு செய்யவில்லை என அம்பாந்தோட்டை மாவட்ட உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் வரவு செலவு திட்டம் தொடர்பான குழு நிலை விவாதத்தின் போது உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டி. வி. சானக மேலும் தெரிவிக்கையில்,

“அரசாங்கம் இதுவரை எவ்வளவு மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்துள்ளது? அரசாங்கத்திடம் நெல் இல்லாமையால் அரிசியின் விலை அதிகரித்துச் செல்வதாக அன்று குற்றம் சுமத்தினீர்கள். எமக்குக் கிடைக்கும் தகவலின் அடிப்படையில் நாளொன்றுக்கு போதுமான அரிசி கூட அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படவில்லை.

அரசாங்கம் நெல் கொள்வனவுக்காக 5 பில்லியன் ரூபாவை மாத்திரமே ஒதுக்கீடு செய்துள்ளது. அந்த நிதியில் நான்கு நாள்களுக்கு போதுமான நெல்லை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும். கீரி சம்பா அரிசி தற்போது கட்டுப்பாட்டு விலையைவிட 40 ரூபா அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றது.” – என்றார்.

# அர்ஜுன் அலோசியஸ்க்கு எதிரான வழக்கு ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஏப்ரல் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செய்தித்தாள் அச்சிடுவதற்கான காகிதங்களை வாங்கியதன் மூலம் 12 மில்லியன் ரூபாயை மோசடி செய்ததாகக் கூறி, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் நேற்று இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அர்ஜுன் அலோசியஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரருக்கு இதுவரை குற்றப்பத்திரிகைகள் வழங்கப்படவில்லை என்று கூறினார்.

இதன்படி,வழக்கை ஏப்ரல் 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்ட நீதவான், அன்றைய தினம் சந்தேகநபரிடம் குற்றப்பத்திரிகையை ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

# பண்டிகைக்காலத்தில் நிவாரண பொதி வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம்



பண்டிகைக் காலத்தில் உணவுப்பொருள் பொதிகளை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 1000 மில்லியன் ரூபா நிதி 1500 மில்லியன் ரூபாய் வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வரவு செலவு திட்டம் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அமைச்சர் வசந்த சமரசிங்க இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

“நாம் ஐயாயிரம் ரூபா பொதியொன்றை 2500 ரூபாவுக்கு வழங்குகின்றோம். அஸ்வெசும் இல்லாத ஆனால் அஸ்வெசுமவிற்காக எதிர்பார்த்துள்ள எட்டு லட்சம் விண்ணப்பதாரிகளுக்கு இந்த நிவாரணம் வழங்குவோம். அதற்காக லங்கா சதொச நிறுவன வழங்குனர்களிடம் விலை மனு கோரி நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

நாட்டரிசி, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, ரின் மீன், சிவப்பு சீனி, கோதுமை மா, சமபோஷா, சோயா உள்ளிட்ட 15 – 17 கிலோ கிராம் எடையுடைய உணவுப் பொருள் பொதியொன்றை நாங்கள் வழங்குவோம்.” என்றார்.

# மீனவர்களை விடுவிக்க கோரி ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்





யாழ். நெடுந்தீவில் கைதான இராமேஸ்வரம் மீனவர்கள் மூவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

பாரம்பரிய மீன்பிடி பகுதியில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க வலுவான தூதரக முயற்சிகள் தேவையென பலமுறை தம்மால் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் இதுபோன்ற கவலையளிக்கக்கூடிய சம்பவங்களின் எண்ணிக்கை தொய்வின்றி அதிகரித்து வருவதாகவும் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் சிறைபிடிக்கப்படுவதால் அவர்களது குடும்பத்தினர் வறுமையின் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என வெளியுறவுத்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டினார்.

தமிழக மீனவர்கள் மேலும் கைது செய்யப்படாமல் தடுக்கவும் இலங்கையில் சிறையிலடைக்கப்பட்டுள்ள 110 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க வலுவான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



# மோடி இலங்கைக்கு செல்லக்கூடாது; மாநிலங்களவையில் வைகோ விசனம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளக் கூடாது என இந்தியாவின் மாநிலங்களவையில் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களின் விடயங்களை சுட்டிக்காட்டி அவர் பேசியிருந்தார்.

இலங்கை கடற்படையின் மனித நேயமற்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வைகோ வலியுறுத்தினார்.




இது தொடர்பாக மாநிலங்களவையில் வைகோ மேலும் உரையாற்றுகையில்,

“கடந்த 40 ஆண்டுகளில் 843 மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்கள். ஜனவரி 25 ஆம் திகதி முதல் 45 நாட்களில் பல்வேறு தாக்குதல்களை இலங்கை கடற்படை நடத்தி இருக்கிறது.

ஜனவரி 25 அன்று 3 படகுகளில் இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது. எல்லை தாண்டி மீன் பிடித்ததாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு லட்சக்கணக்கான ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இலங்கை கடற்படையின் மனிதநேயமற்ற இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது மீன்பிடி தொழிலை அழிக்க இலங்கை கடற்படை விரும்புகிறது. நமது கடற்படை அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறது? நாங்கள் இந்திய அரசுக்கு வரி செலுத்துகிறோம். தமிழக மீனவர்கள் என்ன அனாதைகளா? நமது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்குச் சென்று அந்நாட்டின் ஆட்சியாளர்களைச் சந்தித்தார். நமது வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் அதேபோல் சந்தித்தார். ஆனால், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. தற்போது என்ன காரணத்துக்காக நமது பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்கிறார்? இலங்கை அரசுக்கும் அதன் கடற்படைக்கும் கண்டனம் தெரிவிக்கப் போகிறாரா? இன்றும் கூட இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனர்கள் இந்திய அரசிடம் நீதி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமரை சந்தித்து இது தொடர்பாகப் பேசி இருக்கிறார்.

வெளியுறவு அமைச்சரையும் சந்தித்துப் பேசி இருக்கிறார். பலமுறை கடிதம் எழுதி இருக்கிறார். அவை அனைத்துமே குப்பைத் தொட்டியில் போடப்பட்டுவிட்டன . இதுதான் இந்திய அரசு தமிழக மீனவர்களை, இந்தியக் குடிமக்களை நடத்தும் விதமா? இனிமேலாவது, நீங்கள் அங்கே செல்லாதீர்கள், அவர்களை இங்கே வரவழையுங்கள். இந்தியக் கடற்படை ஒருமுறையாவது ஒரு துப்பாக்கிச் சூட்டையாவது நடத்தி இருக்கிறதா? இவ்விடயத்தில் இந்தியக் கடற்படையும், இலங்கை கடற்படையும் இணைந்து செயல்படுகிறார்கள். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. மொத்த தமிழகமும் இந்திய அரசால் கைவிடப்பட்டது போல் உணர்கிறது.” எனத் தெரிவித்தார்.

வைகோவின் உரைக்குப் பதில் அளித்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்,

“அவையின் மூத்த உறுப்பினர் வைகோ உணர்ச்சிப்பூர்வமாகப் பேசினார். அவரது கவலையை நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால், அவர் பேசியதில் ஒரே ஒரு வார்த்தை அவர் கோபத்தில் பேசி இருக்கிறார் எனக் கருதுகிறேன். அந்த வார்த்தை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில், அது உண்மையல்ல. நமது மீனவர்களைத் துன்புறுத்துவதற்காக நமது கடற்படை, இலங்கை கடற்படையுடன் இணைந்து செயல்படுமா? இந்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

2014ஆம் ஆண்டில் பிரதமர் மோடி பதவியேற்ற உடனேயே, இலங்கை அரசுடன் பேசினார். இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களை உயிருடன் திருப்பி அனுப்ப வேண்டும் எனக் கூறினார். நமது மீனவர்களுக்கு உதவுவதற்கான ஒரு வாய்ப்பையும் நாம் வீணடிக்கவில்லை. நமது மீனவர்களுக்கு எப்போது எல்லாம் பிரச்சினை ஏற்பட்டுள்ளதோ அப்போதெல்லாம் நமது வெளியுறவுத்துறை அமைச்சகமும், பிரதமரும் உதவி இருக்கிறார்கள். வைகோவின் கவலைகள் அனைத்தையும் நான் அங்கீகரிக்கிறேன். ஆனால், அந்த ஒரு வார்த்தையை மட்டும் நீக்க வேண்டும் என்று அவைத் தலைவரைக் கோருகிறேன்.” எனக் குறிப்பிட்டார்.

# சுனிதா வில்லியம்ஸுக்கு முதல்வர் ஸ்டாலின் பாராட்டு

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸுக்கு தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,



“சுனிதா,வில்மோர்உள்ளிட்டோருடன் மேலும் 2 வீரர்களும் ஃப்ளோரிடா அருகே கடலில் பத்திரமாக இறங்கினர். அவர்கள் பத்திரமாக பூமிக்கு வந்தடைந்த செய்தி நம் அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. இத்தருணத்தில் சுனிதா வில்லியம்ஸுக்கும் அவரை பத்திரமாக பூமிக்கு கொண்டு வர உதவிய அனைவருக்கும் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.





# ஹொண்டுரஸில் கடலில் வீழ்ந்த விமானம்; 12 பேர் உயிரிழப்பு

மத்திய அமெரிக்க நாடான ஹொண்டுரஸில் சிறிய வணிக விமானமொன்று கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

கரீபியன் தீவுக்கூட்டத்தில் உள்ள ரோட்டன் தீவிலிருந்து லா சீபாவின் பகுதிக்குச் செல்லும் வழியில் லான்சா ஏர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான மேற்படி விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கடலில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விமானத்தில் 17 பேர் பயணித்துள்ளனர். அவர்களில் 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களில் பிரபல கரிஃபுனா இசைக் கலைஞர் ஆரேலியோ மார்டினெஸும் அடங்குகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ட்ரம்பிற்கு அளித்த வாக்குறுதியை ரஷ்ய ஜனாதிபதி மீறியுள்ளார்

## வொளாடிமிர் ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டு

எரிசக்தி இலக்குகளைத் தாக்குவதன் மூலம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு அளித்த வாக்குறுதியை மீறியதாக உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் புதிய தாக்குதல்கள் மூலம் விளாடிமிர் புட்டின் வழங்கிய வாக்குறுதிகளை மீறியுள்ளார் என நன்கு புலப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.



30 நாள்களுக்கு அத்தகைய இலக்குகளைத் தவிர்ப்பதாக விளாடிமிர் புட்டினின் உறுதிமொழி அளித்தபோதிலும், ரஷ்யா எரிசக்தி வசதிகளைத் தாக்கியதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகமும் உக்ரைனின் எண்ணெய் சேமிப்பு வசதிகளில் ஒன்றை குறிவைத்ததாக குற்றம் சாட்டுகிறது.

டொனால்ட் ட்ரம்புடனான தொலைபேசி அழைப்பின் போது விளாடிமிர் புட்டின் முழு போர்நிறுத்தத்தை நிராகரித்தார் எனவும் அழைப்பு பற்றிய விபரங்களை அறிய அமெரிக்க ஜனாதிபதியிடம் பின்னர் கலந்துரையாடுவதாகவும் ஜெலன்ஸ்கி கூறியிருந்தார்.

அத்தோடு உக்ரைன் குறித்த பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடரும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# லெபனான் - சிரியா போர் நிறுத்தத்திற்கு இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன

லெபனான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்கு இடைப்பட்ட எல்லைப் பகுதியில் கடந்த இரண்டு நாள்கள் தீவிரமாக நடைபெற்று வரும் மோதலை நிறுத்துவதற்கு இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன என சிரியாவின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை, இந்த இணக்கப்பாடு மேம்படுத்தும் என சிரியாவின் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆனால், லெபனானுக்கும் சிரியாவுக்கும் இடையில் இடம்பெற்ற இம்மோதலில் லெபனானை சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டனர் எனவும் 52 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பை சேர்ந்த போராளிகள் கடந்த சனிக்கிழமை சிரியாவிற்குள் நுழைந்து மூன்று வீரர்களைக் கடத்தி சென்று லெபனானில் அவர்களைக் கொன்றதாக சிரியாவின் இடைக்கால அரசாங்கம் குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இம்மோதல் தீவிரமடைந்தது.

# வவுனியாவில் 3 கட்சிகள் மாத்திரமே இதுவரையில் வேட்பு மனுத்தாக்கல்!

(கி.வசந்தன்)

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக வவுனியா மாவட்டத்தில் இதுவரை மூன்று கட்சிகள் மாத்திரமே தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கும் பணிகள் கடந்த இரு தினங்களாக இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் நேற்று மாலைவரை இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய மூன்று கட்சிகள் மாத்திரமே தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இந்தக் கட்சிகளும் மாவட்டத்தில் உள்ள சில சபைகளுக்கான வேட்பு மனுக்களை மாத்திரமே தாக்கல் செய்துள்ள நிலையில் இன்றைய தினம் ஏனைய சபைகளுக்கு தாக்கல் செய்யவுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, மாவட்டத்தில் 50ற்கும் மேற்பட்ட தரப்புக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தினை செலுத்தியுள்ளன. இன்று மதியம் 12.00 மணிவரை மாத்திரமே வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ள நிலையில் ஏனைய தரப்புக்கள் இன்றைய தினத்தில் தமது மனுக்களைத் தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையின் அடிப்படையில் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அதிகமான கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வேட்பாளர்களை தேர்வுசெய்வதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் முன்னணி கட்சிகளும் வேட்பாளர்களை தேடி அலைந்து திரியும் நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!







(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் புதன்கிழமை மாலை ஆறு மணியளவில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் கோசமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். அரசாங்கம் மாணவர்களின் கற்றல் உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரியை முற்றாக நீக்க வேண்டும் என்றும், பல்கலைக்கழகத்தில் புதிய விடுதிகளை உடனடியாக கட்ட வேண்டும் என்றும் கோரிக்கைகளை வைத்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தலைமன்னார் - ராமேஸ்வரம் பயணிகள் கப்பல் சேவைக்காக புதிய கடல் பாலத்தை அமைக்கும் ஆரம்பப் பணியில் இந்தியா




(ந.லோகதயாளன்)

தலைமன்னார் – ராமேஸ்வரம் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்காக ரூ.6.43 கோடி ரூபா (இந்திய நாணயம்) செலவில் புதிய கடல் பாலம் அமைக்கும் ஆரம்பப் பணிகள் இந்தியத் தரப்பில் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் தலைமன்னாரில் இருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கான கப்பல் போக்குவரத்து 1914ம் ஆண்டு துவங்கப்பட்டது. ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்று வந்த கடல் போக்குவரத்து 1964ல் வீசிய கோரப்புயலின்போது தனுஷ்கோடி நிலைகுலைந்ததால் நிறுத்தப்பட்டது. இதன் பின்பும் மீண்டும் தொடங்கப்பட்ட கப்பல் போக்குவரத்து இலங்கை உள்நாட்டு போர் காரணமாக முழுமையாக நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் இரு நாடுகளும் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ல் நாகைபட்டினம் – காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ராமேஸ்வரம் – தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்திற்கு இந்திய அரசு திட்டமிட்டது.

இதற்காக இந்தியத் தரப்பில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர், தலைமைச் செயல் அலுவலர் மா.வள்ளலாளர் ஐ.ஏ.எஸ். தலைமையில் அதிகாரிகள் குழுவினர் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டு கப்பல் சேவை மற்றும் சுற்றுலா படகு சவாரி இயங்குவதற்கு பொருத்தமான இடமாக ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடற்கரை, தங்கச்சிமடம் வில்லூண்டி தீர்த்தம், பாம்பன் குந்துகால் துறைமுகம் உள்ளிட்ட இடங்களை தேர்வு செய்திருந்தனர்.

இவற்றின் அடிப்படையிலேயே இறங்குதுறை பாலம் அமைப்பதற்கு கடலுக்குள் மணல் ஆய்வும் மேற்கொண்டனர்.

தற்போது அவை நிறைவுபெற்று தலைமன்னார் ராமேஸ்வரம் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ப புதிய இறங்குதுறை ஒன்றை அமைக்க 6.43 கோடி ரூபா இந்திய நாணயத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரை அருகே அமையவுள்ள 'T' வடிவிலான புதிய இறங்குதுறை 119 மீட்டர் நீளமும், 7.5 மீட்டர் அகமும், 6 அடி உயரமும் உடையது எனவும், இதன் முதல் கட்ட பணியாக கடலுக்குள் இயந்திரங்களை நிறுத்த தேவையான நகர்வு மேடை அமைக்க மேடைக்கான பாகங்கள் பொருத்தும் பணி ஓலைக்குடா பகுதியில் முழுவீச்சில் நடந்து வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாத இறுதிக்குள் பாகங்கள் முழுமையாக பொருத்துபட்டு அனைத்தும் அக்னி தீர்த்த கடற்கரை புதிய கப்பல் இறங்குதுறை கட்டும் இடத்தில் இறக்கப்படும். அதை தொடர்ந்து கடலுக்குள் தூண்கள் அமைக்கும் பணியை தொடர்ந்து இறங்குதுறைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இறங்குறைக்கான பணிகள் இயற்கையின் கால நிலைக்கு ஏற்றவாறு நடைபெறும் என்பதால் இந்த ஆண்டின் இறுதியிலேயே இவை நிறைவு பெற வாய்ப்புள்ளதாகவும் இந்தியப் பொறியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 5 ஆம் திகதி இலங்கை வரும்போது தலைமன்னார் ராமேஸ்வரம் பயணிகள் போக்கு வரத்து தொடர்பிலும் உரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.





கட்டுப்பண விபரம்

19/03/2025

| சபையின் பெயர் | (1) அ.இ.த.கா | (7) இ.த.அ.க | (8) ஈ.ஐ.மு | (9) ஈ.ம.ஜ.க | (13) ஐ.தே.க | (24) ம.போ.மு | (26) ஐ.த.தே.கூ | (29) தே.ம.ச | (35) த.ம.கூ | (38) த.ச.ஜ.க | (53) பொ.ஜ.மு | (66) ஸ்ரீ.பொ.பெ | (69) ஸ்ரீ.கொ.க | (72) ஐ.ம.ச | (74) சோ.ச.க | (75) ச.அ.தி | | சுயேட்சை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் மாநகர சபை | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | ✓ | | ✓ | | | | 2 | 12 |
| வல்வெட்டித்துறை நகர சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | | | ✓ | | | ✓ | | | | 2 | 10 |
| பருத்தித்துறை நகர சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | | 1 | 11 |
| சாவகச்சேரி நகர சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | | | 3 | 11 |
| காரைநகர் பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | ✓ | | | 1 | 10 |
| ஊர்காவற்றுறை பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | | | | | | ✓ | | | | 0 | 7 |
| நெடுந்தீவு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | | | | | | ✓ | | | | 0 | 7 |
| வேலணை பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | | | 3 | 11 |
| வலிகாமம் மேற்கு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | ✓ | | 3 | 12 |
| வலிகாமம் வடக்கு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | ✓ | | 2 | 12 |
| வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | ✓ | ✓ | | | | 1 | 10 |
| வலிகாமம் தெற்கு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | ✓ | | 1 | 10 |
| வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | | | 2 | 11 |
| வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | ✓ | | | ✓ | | | | 1 | 10 |
| பருத்தித்துறை பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | ✓ | | | ✓ | | | | 2 | 11 |
| சாவகச்சேரி பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | | | ✓ | | | | 2 | 11 |
| நல்லூர் பிரதேச சபை | ✓ | ✓ | | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | | | | 1 | 9 |
| மொத்தம் | 17 | 17 | 1 | 17 | 17 | 2 | 17 | 17 | 14 | 1 | 4 | 2 | 1 | 17 | 1 | 3 | | 27 | 175 |

# யாழில் 17 உள்ளூராட்சி சபைகளுக்கு மொத்தம் 175 தரப்புகள் போட்டியில்!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்காக மொத்தமாக 175 தரப்புகள் நேற்று நண்பகல் வரைக் கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலிற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு இன்று மதியம் 12 மணி வரையில் சந்தர்ப்பம் உள்ளபோதும் போட்டியிடும் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் நேற்று நண்பகல் 12 மணி வரையே தமது கட்டுப் பணத்தை செலுத்த கால அவகாசம் வழங்கப் பட்டிருந்தது.

இதற்கமைய 17 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என 175 தரப்புகளினால் கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் 148 தரப்புகள் கட்சிகள் சார்பானவை.27 தரப்புகள் சுயேச்சைக் குழுக்கள்.

அதேநேரம் உச்சப் பட்சமாக யாழ்ப்பாணம் மாநகர சபை, வலிகாமம் மேற்கு பிரதேச சபை மற்றும் வலி . வடக்கு ஆகிய 3 உள்ளூராட்சி மன்றங்களின் சார்பிலும் தலா 12 தரப்புகள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.

# முல்லையில் 3 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனுக்களைக் கையளித்தது தமிழரசு

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வேட்புமனுப் பத்திரங்களை நேற்றுக் கையளித்தது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுப் பத்திரங்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கையெழுத்திட்டார்.

அதனைத்தொடர்ந்து கரைதுறைப்பற்று, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்குரிய வேட்பு மனுப்பத்திரங்களை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான துரைராசா ரவிகரன் கையளித்தார்.

முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள மாவீரன் பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறு வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன.

அத்தோடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாந்தை கிழக்கு உள்ளூராட்சிமன்றத்திற்குரிய வேட்புமனுப்பத்திரம் இன்றைய தினம் கையளிக்கப்படுமென இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பெருந்திரளான இலங்கைத் தமிழரசுக்கட்சித் தொண்டர்கள் மற்றும், உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள், தமிழ் அரசுக்கட்சி ஆதரவாளர்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை தேர்தலில் இல்லை

தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பி வைத்த கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்க்க முடியாத காரணத்தினால் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்ய முடியவில்லை என தெரிவிக்கிறோம் – என்றுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் 3 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமிழரசுக் கட்சியின் வேட்புமனுக்கள் தாக்கல்

(கி.வசந்தன்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியாவில் 3 மன்றங்களில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை இலங்கை தமிழரசுக்கட்சி வவுனியாவில் நேற்றுத் (19.03) தாக்கல் செய்தது

வவுனியா மாநகரசபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேசசபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களே இதன்போது தாக்கல் செய்யப்பட்டன.

வேட்புமனுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் மற்றும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் முக்கியஸ்தர்கள் சகிதம் கையளித்திருந்தனர்.





# நாட்டின் நீர் தேக்கங்களில் நீர் மட்டம் குறைகின்றது!

(மஸ்கெலியா நிருபர்)

நாட்டின் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் வெப்பநிலை காரணமாக நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

குறிப்பாக விமலசுரேந்திர, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, கலுகல, காசல்ரீ, மவுசாகல, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 25 அடி குறைந்த உள்ளது. அதேபோல் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட சுமார் 20 அடி குறைந்து உள்ளது. கென்யோன் நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 16 அடி குறைந்து உள்ளது. மேல் கொத்மலை நீர் தேக்கத்தின் நீர்மட்டம் அதன்



கொள்ளளவை விட 18 அடி குறைந்து உள்ளது. ஏனைய நீர் தேக்கங்களின் நீர் மட்டமும் இவ்வாறு குறைந்த நிலையில் காணப்படுகிறது.

தொடர்ந்து இவ்வாறு காலநிலை தொடரும் பட்சத்தில் மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பாரிய குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும்.

தற்போது பல தோட்டங்களில் சுத்தமான குடித் தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.



# வவுனியா மாநகர சபையில் போட்டியிட சங்குக் கூட்டணி வேட்புமனு தாக்கல்!

(கி.வசந்தன்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் செயற்பாடு கடந்த 17 ஆம் திகதிமுதல் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் வவுனியா மாநகர சபையில் சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி நேற்று தாக்கல் செய்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில், கூட்டணியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் சகிதம் தமது வேட்புமனுவை கையளித்திருந்தனர்.



# வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி அதிகாரங்கள் தமிழ் மக்களின் கைகளில் இருக்க வேண்டும்!

## முன்னாள் எம்.பி. சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து

(கி.வசந்தன்)

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் தமிழ் மக்களின் கையில் இருக்க வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சித் தேர்தலைப் பொறுத்த வரை வடக்கு – கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் தமிழ்



மக்களின் கையில் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களது வேண்டுகோளாக இருக்கிறது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பெரும்பாலன சபைளில் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. உள்ளூராட்சி சபை அதிகாரம் என்பது வடக்கு – கிழக்கில் தமிழ் மக்கள் தங்களே தாங்கள் ஆளக் கூடிய வகையில் வாக்களிக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள 300, 400 கிலோ மீற்றறில் இருக்கும் தேசிய சக்திகளிடம் கையளிக்காமல், உங்களுடன் இருக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் கையளிக்க வேண்டும். அதன் மூலமே வடக்கு – கிழக்கின் இருப்பை தக்க வைக்க முடியும். – எனத் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தமை தேவையில்லாத வேலை எனத் தமிழ் மக்கள் உணர்கின்றனர்

## முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் கூறுகின்றார்



(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தோமென தேவையில்லாத வேலை என வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் உணர்ந்துள்ளார்கள் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரும், வவுனியா மாநகரசபை வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு – கிழக்கில் வாக்களித்தார்கள். அது தேவையில்லாத வேலை எனத் தற்போது தமிழ் மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

எங்களது பிரச்சினைகளை சொல்லக் கூடிய எங்களது பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கக் கூடிய தமிழ் தேசியத்தின் பால் நிற்கும் தமிழ் தேசியக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள். குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை விவகாரத்தை தடுக்க எமது தமிழ் தேசியக் கட்சி உறுப்பினர்களை கொண்டு வாருங்கள். அவர்களால் தான் அதனை தடுக்க முடியும். தேசிய கட்சிகளுக்கு வாக்களிக்கும் போது அதற்கு எதிராக அவர்கள் குரல் கொடுக்க மாட்டார்கள். எனவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.



# மஸ்கெலியா மவுசாகலை முத்துமாரியம்மன் மஹா கும்பாபிஷேகம் நேற்று பக்திபூர்வமாக

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டம் சிவனொளி பாதமலை அடிவாரத்தில் அமையபெற்றுள்ள வரலாற்று சிறப்பு மிக்க மஸ்கெலியா மவுசாகலை தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

காலை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு மஹா பூர்ணாகுதி, தீபாரதனை, திருமுறை பாராயணம், விசேட யாக பூஜை என்பன மேற்கொள்ளப்பட்டு சுப முகூர்த்த சுப வேளையில் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் தற்புருஷ சிவாச்சாரியர் சிவஸ்ரீ ஸ்கந்தராஜா குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மஸ்கெலியா வாழ் ஏராளமான பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 20.03.2025



### மேஷம்

அனுசரித்து விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும். தியானம் அல்லது பிரார்த்தனை செய்வதற்கு இன்றைய நாள் ஏற்றது.

உங்கள் செயல் திறனுக்கு விமர்சன ரீதியான பாராட்டுக்கள் கிடைக்கும். உங்களின் சிறப்பான தகுதிகளை வெளிக்கொணர்ந்து வெற்றி பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கலாம்.

உங்கள் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும்.

நீங்கள் திடமாக காணப்படுவீர்கள்.



### ரிஷபம்

இன்று சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். திரைப்படம் பார்த்தல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலை காணப்படும். சில சமயங்களில் உங்கள் பொறுமையை இழப்பீர்கள். உங்களின் நாணயம் சந்தேகிக்கப்படலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காணப்பீர்கள். சகஜமாக நடந்து கொள்வது நல்லது.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சிகரமாக இருக்காது. கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று செலவுகள் ஏற்படும்.

கால் வலி மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.



### மிதுனம்

இன்று உங்கள் செயல்களை அறிவுப்பூர்வமாக அணுக வேண்டியது அவசியம். இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சில கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பரம்மரிக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

இன்று ஆரோக்கியம் மிதமாக இருக்கும். கால்களில் வலி மற்றும் விறைப்புத்தன்மை ஏற்படலாம்.



### கடகம்

இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதிநிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.



### சிம்மம்

இன்று உங்கள் எதிர்காலத்துக்காக உங்களை முன்னேற்றிக் கொள்ளும் வழி வகைகள் கிடைக்கும். எதிர்மறையான போக்கை தவிர்ப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலைகளை தவிர்க்க உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது சர்ச்சைக்குரிய விஷயங்களை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.



### கன்னி

இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை தரும் எண்ணங்களை தவிர்த்து நேர்மறையாக எண்ணினால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று உறுதியான மனநிலையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறிருந்தால் தடைகளை சமாளித்து பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும்.

சில குடும்ப பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் இருவரிடையே கருத்து வேற்பாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் கிடையாது. கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.



### துலாம்

இன்று உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த பிரார்தனை மேற்கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். கூடுதல் பணிச்சுமைகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். சிறந்த பலனைக் காண நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காணப்பீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்போடு பழக வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.



### விருச்சிகம்

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாகக் கையாள்வீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுபடுத்தும்.

நீங்கள் பங்குகளில் செலுத்தும் பணம் லாபத்தை அளிக்கும். எதிர்பாராத பண வரவிற்கு சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.03.2025




இன்று மிகவும் சாதகமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை மூலம் நெருக்கமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்து சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களால் பாராட்டப்படும்.

உங்கள் காதலரை இன்று மாலை சந்தித்து மகிழ்ச்சியுடன் இருக்கலாம். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம்.

இன்று பண வரவு மகிழ்ச்சி தரக் கூடியதாக இருக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.




இன்று பலன்கள் தாமதமாக கிடைக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று மகிழ்சிகரமான நாளாக காணப்படாது. இன்று அதிகமான எதிர்பார்ப்பு கூடாது.

அதிகமான பணிகள் கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க தவறுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைக்க இனிமையான வார்த்தைகளை பேசுங்கள்.

நிதிநிலைமை அதிருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் நிதி தேவைகளை சௌகரியமாக கையாளும் சூழ்நிலை இன்று இருக்காது.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று உங்களிடம் அமைதியின்மை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்த சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் எதிர்கால வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக இயற்ற நீங்கள் திட்டமிட வேண்டும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையில்லாத செலவினங்கள் ஏற்படும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்கு முன் முடிக்க இயலும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் சில மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று சொத்துகள் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் உடல் நலம் சிறப்பாக இருக்கும்.





# இளங் காதலியைக் குத்தி கொலை செய்த காதலன்!

## வென்னப்புவ பகுதியில் சம்பவம்

**(உடப்பு க.மகாதேவன்)**

காதல் உறவு தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதை அடுத்து, காதலனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் காதலி உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வென்னப்புவ, வைக்கால பகுதியில் பதிவாகியுள்ளது.

காதலியின் வீட்டிற்குள் இந்த கத்திக்குத்து சம்பவம் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமல்கா துஷாங்கி சில்வா என்ற 20 வயதான இளம் பெண்ணே கத்திக்குத்தில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக 21 வயது இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.